பக்கங்கள்:-14

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஆடி 29 | திங்கட்கிழமை | 14.08.2023 | அதிர்வு 13

## நாளை மடுத் திருவிழா ரணிலும் வருகின்றார்!

### அதனால் அங்கு தீவிர கெடுபிடி



(மன்னார் நிருபர்)

மன்னார் மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா 03▶

# பதவியைத் தக்க வைப்பதற்கு ரணில் நடத்தும் நாடகமே ‘13’!

### சிறிதரன் எம்.பி. சீற்றம்





கிளிநொச்சி, ஓகஸ்ட் 14

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தான் ஜனாதிபதியாக வருவதற்கான திட்டமாகவே 13ஆம் திருத்தச்சட்டத்தை தாம் முழுமையாக நடைமுறைப்படுத்த முயல்கிறார் என்ற ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துகின்றார்.அவர் அரசியல் தீர்வையும் பெற்றுத் தரமாட்டார் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார். 03▶

## தங்காலையிலும் மாணவன் மோ.சைக்கிள் விபத்தில் பலி

தங்காலை நகரில் உள்ள திரையரங்கு ஒன்றுக்கு முன்பாக இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த 19 வயதுடைய பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தங்காலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மாணவன் நேற்று முன்தினம் தங்காலை நகருக்குச் சென்று விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 03▶

## சிறுமி மீது பாலியல் வன்கொடுமை பெரிய தந்தையார் நேற்றுக் கைது

### ஊர்காவற்றுறைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில், தனது வீட்டில் தங்கி இருந்த சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த குற்றச்சாட்டில் அந்தச் சிறுமியின் பெரிய தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

வீட்டில் வறுமை காரணமாக 17 வயதான தமது மகளை, தந்தையின் அண்ணாவின் வீட்டில் பெற்றோர் 03▶

### யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் சனியன்று



## சடலமாகக் குடும்பஸ்தர் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அறுவர் கைது!

யாழ்ப்பாணம் – கல்வியங்காடு ஜி.பி.எஸ். விளையாட்டு அரங்கப்பகுதியில் நேற்று முன்தினம் நிர்வாண நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். விஷேட குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் மற்றும் சிந்தங்கேணி பிரதேசங்களைச் 02▶

## விஷ ஜந்துகள் குறித்து கவனம் மடு பக்தர்களுக்கு எச்சரிக்கை



(மன்னார் நிருபர்)

மன்னார் மருத மடு திருத்தலத்தில் தங்கியுள்ள உள்ள பக்தர்கள் விஷ ஜந்துகள் குறித்து மிக அவதானமாக இருக்க வேண்டும் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் 02▶

## இரகசியம் பரகசியம்



நேற்று காலையில் நண்பர் ஒருவர் கொழும்பிலிருந்து தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

“கடந்த இரண்டு வார கால ‘முரசு’ பத்திரிகையின் காலை, மாலை இதழ்களை இப்போது தான் ஒழுங்காகத் 02▶

# தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானம்

அரசாங்கம் தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ளது.

தொடரும் வரட்சியான காலநிலை அரசாங்கத்திற்கு மேலும் நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

அரசாங்கம் அவசரமாக மின்சாரத்தை தனியார் துறையினரிடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ள அதே வேளை வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நஷ்ஈட்டை வழங்கவும் தீர்மானித்துள்ளது.

தனியார் துறையினரிடமிருந்து அவசர மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த வாரம் அனுமதியளித்துள்ளது.ஆறுமாத காலத்திற்கு நாளாந்தம் 100 மெகாவோட் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதிவழங்கியுள்ளது.

அடுத்த மாதம் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதேவேளை நீர்மின்சாரஉற்பத்தி பாதிக்கப்படுவதால் தேவை அதிகரிக்கும் என தெரிவித்துள்ள இலங்கை மின்சாரசபை நாளாந்தம் 150 மெகாவோட் மின்சாரத்தை கொள்வனவு செய்யவேண்டியிருக்கும்என தெரிவித்துள்ளது.

நீர்மின் உற்பத்தியில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் ஒரு பிரிவு தொழில்நுட்ப பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளார் என அமைச்சர் மஹிந்த சமரவீர தெரிவித்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேடிப்பிடித்து வாசித்தேன். உங்களின் 'இரகசியம் பரகசியம்'பகுதிகளை முற்றாக வாசிக்க முடிந்தது. அதன் ஆரம்ப இதழ்களில் 2005 ஜனாதிபதி தேர்தல் சமயத்தில் ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானங்களே அவர் தோல்வி அடையக் காரணம் என்ற சாரப்பட நீங்கள் சில விடயங்களை உங்கள் அனுபவமாக - பட்டறிவாக - எழுதியுள்ளீர்கள் ஆனால் மஹிந்த ராஜபக்ஷ சார்பில் வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதி பூவண்ணன் என்பவரைச் சந்தித்த சிலர், புலிகளுக்குப் பெருந்தொகைப் பணம் கொடுத்தனர் என்றும், அதைப் பெற்றுக் கொண்டே புலிகள் ரணிலுக்கு வாக்களிக்காமல் விடும் முடிவை எடுத்து, அதைத் தமிழர்களுக்கான முடிவாக அறிவித்தார்கள் என்றும் பேச்சடிபட்டது. எது உண்மை? மஹிந்த தரப்பிடம் பணம் வாங்கிக் கொண்டு தமிழ் மக்களை ரணிலுக்கு ஆதரவாக வாக்களிக்காமல் புலிகள் தடுத்தார்கள் என்பதா? அல்லது ரணில் தமது திட்டத்திற்கு இணங்கி வராமையால் அவருக்கு வாக்களிக்க விடாது புலிகள் தடுத்தார்கள் என்பது உண்மையா?எது உண்மை?" - என்று கேட்டார் அந்த நண்பர்.

"நான் சம்பந்தப்பட்ட - எனக்குத் தெரிந்த - நான் அறிந்து கொண்ட - விடயங்களை மட்டுமே நான் எழுதி இருந்தேன். மஹிந்த தரப்பிடமிருந்து விடுதலைப் புலிகள் பணம் பெற்றுக் கொண்டார்கள், அதற்குப் பின்னரே தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் முடிவை எடுத்து அவர்கள் அறிவித்தார்கள் என்றெல்லாம் தேர்தல் முடிந்த கையோடு இருந்தே செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. மஹிந்த தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், மஹிந்த தரப்புக்கும் புலிகளுக்கும் இடையில் சமாதான முயற்சிகளை ஒட்டிய ஒரு சில ஆரம்ப ஊடாட்டங்களை நான் செய்ய வேண்டி வந்தது. அதன் நிமித்தம் நேரடியாக மஹிந்த ராஜபக்ஷவுடனும், மறுபக்கத்தில் தமிழ்ச்செல்வன் மற்றும் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோரோடும் நான் தொடர்ந்து கலந்துரையாட வேண்டியிருந்தது. அச்சமயத்தில் இது பற்றி ஒரு தடவை புலிகளின் கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் வைத்து தமிழ்ச்செல்வனோடு தனித்திருந்து மனம் விட்டு பேச எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. 'பணம் வாங்கிக் கொண்டு தான் மஹிந்தவுக்கு வெற்றி கிடைக்கும் விதத்தில் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுக்கும் முடிவை அறிவித்தீர்கள் என்று தொடர்ந்து செய்திகள் வருகின்றனவே. எது உண்மை?' - எனப் பட்டவர்த்தனமாகவே அவரிடம் கேட்டேன். அவர் கூறிய பதில் எனக்கு இன்னமும் சொற்பிசகாமல் நினைவில் நிற்கின்றது" - என்று அந்த நண்பரிடம் கூறினேன்.

அது மட்டுமல்ல, இவ்விடயத்தை நேரடியாக ஜனாதிபதி மஹிந்தவிடம் நான் கேட்காமல் விட்டாலும், அவர் மூலம் சாடைமாடையாக சில விடயங்களையும் நான் அறிந்து கொண்டேன் அல்லது அவரது சிலேடையான பதில்களில் இருந்து நான் ஊகித்துக் கொண்டேன். அவரும் ஏமாற்றப்பட்டார் என்பதே என் கணிப்பு. அந்தக் கொடுக்கல் - வாங்கலில் சம்பந்தப்பட்டோர் இப்போது காவலரை ஏவக் கூடிய உச்சப் பதவியில் இருக்கிறார்கள். மஹிந்த பக்கத்தில் என்ன நடந்தது என்பதை நான் இப்போது அப்பட்டமாகக் கூறினால் மஹிந்தவினால் கூட என்னைக் காப்பாற்ற முடியுமோ தெரியாது. எனினும் இயன்றவரை விடயங்களைக் கோடி காட்டுவேன். என்ன நடந்திருக்கும் என்பதை வாசகர்களே தொகுத்து ஊகித்துக் கொள்ளட்டும்.

தமிழ்ச்செல்வன் சொன்ன பதிலை விவரமாக நாளை முதலில் தருவேன். பின்னர் மற்றப் பக்கத்தில் என்ன நடந்தது என்பதை கோடி காட்டுகிறேன்.

நாளை வரை பொறுத்திருங்கள் நண்பர்களே...!

## விஷ ஜந்துகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

ரி.வினோதன் அவசரக் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மடு மாதா திருத்தலச் சூழலில் பெருமளவில் பக்தர்கள் தங்கியுள்ள சூழ்நிலையில் இடையிடையே மழை பெய்து வருகிறது.

மழையால் தமது வாழ்விடங்களில் வசிக்க முடியாது பல்வேறுபட்ட விஷ ஜந்துக்கள் வெளியேறி வரும் நிலையில் அவற்றால் பக்தர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே ஆலயச் சூழலில் தங்கியுள்ள பக்தர்கள் இது தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

அத்துடன் ஏதாவது தெரியாத அல்லது அடையாளம் காணப்பட்ட விஷ ஜந்துக்களால் கடி உண்டவர்கள் உடனடியாக மடு தேவாலயத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். - என அவர் தெரிவித்தார்.

மன்னார் மருத மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெற உள்ள நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தந்து தற்காலிக கூடாரங்களை அமைத்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## சடலமாகக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சேர்ந்த 4 ஆண்களும் 2 பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது :-

சடலமாக மீட்கப்பட்ட நபர் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது வயதுச் சிறுமி ஒருவரை பாடசாலைக்கு ஏற்றி இறக்கி வரும் நிலையில் குறித்த நபர் சிறுமியுடன் தவறாக நடந்ததாக சிறுமி தனது தாயாருக்குத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்தத் தகவலை தாயார் சித்தங்கேணியில் உள்ள சிறுமியின் மாமனுக்கு தெரிவித்திருக்கிறார். அவர் கோப்பாய் வந்து சமந்தப்பட்ட நபரை சிந்தங்கேணிக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து விசாரித்த போது அந்நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த நபரின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்ட பொழுதும் உயிர் பிரியக் கூடிய வகையில் காயங்கள் பாரதூரமானவையாக இல்லை எனவும், அவர் ஏற்கனவே இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

சம்பந்தப்பட்ட சிறுமி இன்றைய தினம் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ள நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்றிரவு நீதிபதியின் இல்லத்தில் அவருக்கு முன்னால் ஆஜர்படுத்தப்பட்டிருந்தனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் மகாவாக்கியங்கள்

'யாம் அறியோம்'

'எப்பவோ முடிந்த காரியம்'

- இவை யாழ்ப்பாணத்துச் சித்தர் யோகர் சுவாமியின் நான்கு மகா வாக்கியங்களில் இரண்டு.

இவற்றைச் சற்று மாற்றி, தமது மகா வாக்கியங்களாக்கியிருக்கின்றார் போலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

'எப்பவோ முடித்த காரியம்'

'யாம் அறிவோம்'

- இவை ரணிலின் மகாவாக்கியங்கள் போலும்.

எதிர்பாராமல் கிடைத்த இரண்டு வருட கால ஜனாதிபதிப் பதவியை வைத்துக்கொண்டு, தொடர்ந்து அடுத்த ஐந்து ஆண்டுகளும் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்ள அவர் திட்டமிட்டார். அதற்காகத் 'தான் அறிந்து' அவர் கட்டவிழ்த்த காரியங்களே இப்போது நடக்கின்றன. அதனால் தான் 'எப்பவோ முடித்த காரியம்', 'யாம் அறிவோம்' என்பதை ரணிலின் மகாவாக்கியங்களோ என்று நாம் குறிப்பிடும் கட்டம் வந்துள்ளது.

தான் போட்டியிட்டு வெல்லக்கூடிய அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், தேசிய ரீதியில் எந்தத் தேர்தல் நடந்தாலும், அதன் முடிவு தன்னைப் பலவீனப்படுத்தி, எதிரணித் தரப்பை பலப்படுத்தி விடும் என்பது ரணிலுக்கு நன்கு தெரியும். அதனால், தான் வெற்றியீட்டக் கூடிய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர், வேறு எந்தத் தேர்தலும் நடைபெறாமல், தந்திரோபாயமாக அரசியல் காய் நகர்த்தல்களை முன்னெடுக்கின்றார் அவர்.

நிதி அமைச்சர் என்ற முறையில் நிதி ஒதுக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு உள்ளூராட்சித் தேர்தலுக்கு ஆப்படித்தார்.

தாம் நாடாளுமன்றத்தைக் கலைக்காத வரை நாடாளுமன்றத் தேர்தல் இல்லை என்பதால், அது குறித்து அவர் அலட்டிக் கொள்ள வேண்டி நேரிடவில்லை.

ஆனால் மாகாணசபைத் தேர்தல் நடைபெறாமல் இருப்பதற்கு தமது முந்திய அரசும், தாமுமே பிரதான காரணம் என்பதும், அது தமிழர்களுக்கு நன்கு தெரியும் என்பதும் ரணிலுக்குப் புரியும்.

அதனால், மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை வழங்கி, அத்தேர்தலை நடத்தப் போகின்றவர் போல அவர் நாடகமாடுகிறார். மாகாணங்களுக்கு 13ஆம் திருத்தபடி முழு அதிகாரப் பகிர்வு என்றதும் தென்னிலங்கை கெம்பி எழும், அதை வைத்துக் கொண்டே, அந்தத் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதித் தேர்தல் வரைக் காலத்தை இழுத்தடிக்கலாம், அதே நேரம் 'மாகாண சபைத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் முயன்றார், ஆனால் சிங்களத் தரப்புக்களின் கடும் எதிர்ப்பால் அதனை அவர் செய்ய முடியாது போய் விட்டது, அதற்கு ரணிலை நொந்து என்ன பயன்?' என்று தமிழர்கள் நம்புவார்கள் என்றெல்லாம் அவர் கணக்கிட்டார்.

இப்படி அவர் எல்லாவற்றையும் அறிந்தபடி, 'யாம் அறிவோம்', 'எப்பவோ (திட்டமிட்டு)முடித்த காரியம்' போன்று விடயங்கள் அரங்கேறுகின்றார்.

எல்லாம் அவர் - ரணில் - போட்ட திட்டப் பட்டி அரங்கேறினாலும், தெய்வம் என்று ஒன்று உண்டல்லவா? அதை நாம் மறந்து விடக் கூடாது.

அவர் திட்டம் போட்டு 'எப்பவோ முடித்த காரியம்', தெய்வ சித்தத்தால் 'முழுதும் உண்மை' அம்பலமாகி, தமிழ் மக்களுக்கு 'ஒரு பொல்லாப்புமில்லை' என்பதாக முடிந்து விடலாம். யாம் அறியோம்...!

## நாளை மடுத் திருவிழா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

திருப்பலியில் நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற உள்ள நிலையில் அன்றைய தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மடு திருத்தலத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள உள்ளார்.

ஜனாதிபதியின் மடு திருத்தல விஜயத்தை ஒட்டி மடு திருத்தலத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனாகல் மடு திருத்தலத்திற்கு செல்லும் பக்தர்கள் பாதுகாப்பு கெடுபிடிகள் மற்றும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் பலரும் நாளைய தினம் மடுத் திருத்தலத்திற்கு வருகை தர உள்ளமையினால் இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மடு திருத்தல நுழைவாயில் மற்றும் ஆலய வளாக பகுதிக்கு பக்தர்கள் செல்லும் போது இராணுவம் மற்றும் பொலிஸாரின் தீவிர சோதனை நடவடிக்கைகளுக்கு முக்ச்ம் கொடுக்க நேரிடுகிறது. முன்பு என்றும் இல்லாத அளவுக்கு பல்வேறு அசௌகரியங்களுக்கு இப்போது தாங்க முகம் கொடுத்து வருகின்றனர் எனப் பக்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

## பதவியைத் தக்க..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் புதிய நிர்வாகத்தெரிவு கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தாம் ஜனாதிபதியாக வருவதற்காக 13 ஆம் திருத்தச்சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதாக ஒரு மாயைத் தோற்றத்தை ஏற்படுத்துகின்றார். அவர் அரசியல் தீர்வையும் பெற்றுத்தரமாட்டார். மக்களை ஒரு குழப்பத்தில் வைத்திருப்பார் – என சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இவ் நிர்வாகத் தெரிவில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேழமாலிதன், முன்னாள் வடமாகாணக் கல்வி அமச்சர் தம்பிராசா குருகுலராஜா மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறுமி மீது பாலியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

தங்க வைத்துள்ளனர்.

இந்நிலையில், சிறுமியின் பெரிய தந்தை நீண்ட காலமாக சிறுமியை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இது குறித்து சிறுமி தனது பெற்றோருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, நேற்று முன்தினம் பெற்றோரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சிறுமியின் பெரிய தந்தையை கைது செய்துள்ளமையுடன், சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## தங்காலையிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

தங்காலை – ஹேனகடுவ, பன்னவாச மாவத்தையை வசிப்பிடமாகக் கொண்ட கொடிதுவக்கு ஆராச்சிகே சித்துல் சமூதய என்ற – வீரகட்டிய நடுநிலைப் பாடசாலையில் உயர் வகுப்பில் கல்வி பயின்ற – மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் கைதடி – நுணாவிலிலும் பாடசாலை மாணவன் ஒருவன் நேற்று மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழந்தான் என்பது தெரிந்ததே.

# நடத்துநர்கள் இல்லாத பஸ்கள் விரைவில் கொழும்பில் சேவை

நடத்துநர்கள் இல்லாத பஸ்களை இன்னும் 3 மாதங்களில் கொழும்பு நகரில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது, சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

இலத்திரனியல் அட்டை மூலம் மட்டுமே பணம் செலுத்து அதில் பயணம் செய்ய முடியும் என்றும், இந்த பஸ்களை இயக்குவதன் மூலம் கொழும்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிளிநொச்சி கண்டாவளை பகுதியில் 'ஊர் கூடி உண்டு மகிழ்வோம்' நிகழ்வு









அமரர்.திருமதி.சிவலோகநாதன் யோகேஸ்வரியின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு

"ஊர் கூடி உண்டு மகிழ்வோம்" விளையாட்டு விழா கிளிநொச்சி கண்டாவளை பகுதியில் அமைந்துள்ள ரூபன் விளையாட்டு மைதானத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ரூபன் விளையாட்டுக் கழகத்தினால் சிறந்த முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு விளையிட்டு நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன், கண்டாவளை பிரதேச செயலாளர் பிருந்தாகரன், பிரதேச சபை முன்னாள் தவிசாளர் வேழமாலிகிதன், கிராம அலுவலர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வடக்கில் கண்ணிவெடிகளை அகற்ற ஜப்பான் நிதியுதவி

வட மாகாணத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை விரைவுப்படுத்துவதற்கான நிதியுதவியை வழங்க ஜப்பான் அரசாங்கம் இணக்கம் வெளியிட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் ஒன்றில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கையெழுத்திட்டுள்ளார்.

அதேநேரம், இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உள்ளிட்ட குழுவினர், கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்படும் யாழ்ப்பாணம் – கிளாலி பகுதிக்கு விஜயம் செய்திருந்தனர்.

# கெஹலியவுக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாகக் கையெழுத்துச் சேகரிப்பு!

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக 10 ஆயிரம் பேரின் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பமானது.

நாவலப்பிட்டி நகரில் நேற்று முற்பகல் இந்த நடவடிக்கை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை எதிர்வரும் செப்டம்பர் முதல் வாரத்தில் 3 நாள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனமல்விலவில் 4 கஞ்சாத் தோட்டங்களை முற்றுகையிட்டது விசேட அதிரடிப் படை!

## 3 பேர் கைது 20,674 கஞ்சா செடிகள் பிடுங்கியழிப்பு





(கனகராசா சரவணன்)

தனமல்வில ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனியாரின் நான்கு காணியில் சட்ட விரோதமான முறையில் பயிரிடப்பட்டிருந்த கஞ்சா தோட்டத்தை உடவலவ விசேட அதிரடிப்படையினர் நேற்று

ஞாயிற்றுக்கிழமை காலையில் முற்றுகையிட்டு 5 அடி உயரம் கொண்ட 20 ஆயிரத்து 674 கஞ்சா செடிகளைப் பிடுங்கி அழித்தமையுடன்3 பேரை கைது செய்ததுள்ளனர்.

உடவலவ் விசேட அதிரடிப்படையின ருக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்து ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவிலுள்ள 4 கஞ்சா தோட்டங்களை நேற்றுக் காலையில் விசேட அதிரடிப் படையின் முற்றுகையிட்டனர்.

இதன்போது கஞ்சா செய்கையில் ஈடுபட்ட 3 பேரை கைது செய்ததனர். அங்கு 20 பேர்ச் காணியில் ஐந்தரை அடி உயரம் கொண்ட 4,358 கஞ்சா செடிகளும், 10 பேர்ச் காணியில் ஐந்தே முக்கால் அடி உயரம் கொண்ட 2178 கஞ்சா செடிகளும், 30 பேர்ச் காணியில் ஐந்தடி உயரம் கொண்ட 6,751 கஞ்சா செடிகளும், 30பேர்ச் காணியில் நான்கு அடி உயரம் கொண்ட 7,387 கஞ்சா செடிகளுமாக 20 ஆயிரத்து 674 கஞ்சா செடிகளைப் பிடுங்கி அழித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை சான்று பொருளாகக் கஞ்சா செடிகளுடன் தம்மிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர் எனவும் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஹம்பேகமுவ பொலிஸ் தெரிவித்தனர்.

# ‘விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்’ போதைப் பாவனைக்கு எதிராக பயிற்சிநெறி







அபயம், சிவபூமி மற்றும் துமி அமைப்புகள் இணைந்து போதைப்பொருள் பாவனைகளுக்கு எதிராக நடத்தி வருகின்ற “விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்” எனும் கருத்திட்டத்தின் ஓர் அம்சமாக ஏற்கனவே பாடசாலைகளில் நடத்திய விழிப்புணர்வு கருத்தரங்குகளின் போது தெரிவு செய்யப்பட்ட முதல் அணியான 40 மாணவர்களுக்கான வாழ்வியல் பயிற்சிப்பட்டறை இராமநாதன் மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது. இதற்கு பூரண ஒத்துழைப்பு நல்கிய வடமாகாண கல்வி அமைச்சிற்கு ஏற்பாட்டாளர்கள் நன்றிகளை தெரிவித்திருந்தார்கள்.

இராமநாதன் மகளிர் கல்லூரி, ஸ்கந்தவரோதயா கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி மற்றும் வட்டு இந்துக் கல்லூரி மாணவர்கள் பங்குபற்றிய இந்நிகழ்வில் வைத்தியர்கள், துறைசார் வளவாளர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். கலாநிதி. ஆறு.திருமுருகன் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்டார். பங்குபற்றிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களுடன் மதிய போசனமும் வழங்கப்பட்டது. இந்த பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்ட மாணவர்கள் பாடசாலை மட்டத்திலும், சமூக மட்டத்திலும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவார்கள் என கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# வரட்சிக்கு மத்தியில் பரவும் எலிக் காய்ச்சல்

தற்போது நிலவும் வரட்சியான காலநிலைக்கு மத்தியில் “எலிக்காய்ச்சல்” எனப்படும் லெப்டோஸ்பிரோசிஸ் பரவல் அதிகரிப்பதை இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டி எச்சரித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் நபர்கள் - குறிப்பாக மீனவர்கள் - இது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

குருணாகல் ஹிரிபிட்டியவில் அமைந்துள்ள ரொடரட்ட வாவியில் நீராடிய இரு இளைஞர்கள் துரதிர்'டவசமாக உயிரிழந்ததையடுத்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# விமானப்படை வீரரின் நகை திருடப்பட்டது

கட்டுநாயக்க விமான நிலைய விமானப்படை முகாமில் உறங்கிக்கொண்டிருந்த விமானப்படை வீரர் ஒருவரின் தங்க நகை திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

படைமுகாமில் உறங்கிக்கொண்டிருந்த அவரது தங்க நகையை யாரோ திருடிச் சென்றுள்ளனர் என விமான நிலையப் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



# Pearl Island Inn

## Hotel & Restaurant

Dine - in | Take Away | Soft Drinks

குறைந்த விலையில் நிறைந்த வசதிகளுடன்
உயர்தரம் வாய்ந்த தங்கும் வசதிகள் (Rooms),
உலகத் தரம் வாய்ந்த
யாழ்., இந்திய, சைனீஸ், மொங்கோலியன்
உணவு வகைகள்
மற்றும்
குளிர்பானங்களை இங்கிருந்தும்
உங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று
சுவைத்து மகிழ்ந்திட எம்முடன் இணைவீர்

**உங்கள்**
S.Ubesgaran (Segar) &
U.Kamalasegar
Pearl Island Inn (குழுமம்)

**தொடர்புகளுக்கு**
077 002 2088, 021 222 2678
No. 603, Hospital Road, Jaffna
www.pearlislandinn.com



## திம்புள்ள - பத்தனை சந்தியில் பௌசருடன் மோதல்

# விபத்துக்குள்ளான காரின் சாரதி மதுபானம் அருந்தியிருக்கவில்லை

ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் திம்புள்ள – பத்தனை சந்தியில் நேற்று முன்தினம் இரவு

எரிபொருள் பௌசரும், காரொன்றும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐவர் படுகாயமடைந்த சம்பவம் தொடர்பில் மேலதிக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

காரின் சாரதி மது அருந்தியிருந்தார் என இவ்விபத்து தொடர்பில் முதலில் வெளியான செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது நேற்றிய மாலை முரசு இதழிலும் பிரசுரமாகியிருந்தது.

ஆனால் கார் சாரதி மது அருந்தியிருக்கவில்லை எனவும், காரில் பயணித்த ஏனையோர் மது அருந்தியிருந்தனர் எனவும் திம்புள்ள – பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கள் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

காயமடைந்த ஐவரும் நோர்வூட் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.





# தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்:

## நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபை கோரிக்கை

நாட்டில் நிலவும் வறட்சியான கால நிலை காரணமாக குழாய் நீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

வறட்சியான காலநிலையால் மக்களின் சராசரி தண்ணீர் நுகர்வு வெகுவாக அதிகரித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலையில் தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மக்களைக் கொண்டுள்ளது.

வாகனங்கள் கழுவுதல், தோட்டம் அமைத்தல், நீச்சல் குளம் பராமரிப்பு போன்ற பணிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குழாய் நீரைப் பயன்படுத்துவதை மட்டுப்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை பொது மக்களை கேட்டுக்கொள்கின்றது.

குறைந்த அழுத்தம் காரணமாக உயரமான பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் தடைபடலாம். எனவே பொதுமக்கள் தண்ணீரைச் சேகரித்து சிக்கனமாகப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

எனவே சில பகுதிகளில் குறைந்த அழுத்தத்தில் தண்ணீர் வரக்கூடும் என்றும், தண்ணீர் பிடிப்பு பகுதிகளில் மழை பெய்தால் நிலைமை மேம்படும் என்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

# ஆலையடிவேம்பு இந்து மாமன்றத்தின் 20 ஆம் ஆண்டு நிறைவு விழா



**(வடிவேல் டினேஸ்)**

20 வருடங்களாக பல்வேறு ஆன்மீகச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று (13) இடம்பெற்றது.

ஆலையடி வேம்பு பிரதேச இந்து மாமன்றத்தின் தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இவ்விழா, அக்கரைப்பற்று வம்மியடி பிள்ளையார்ஆலயத்தில்அமைந்துள்ள, ஆறு முகநாவலரின் திருவுருவப் படத்திற்கான பூசை வழிபாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

பின்னர் பிரதான வீதியூடாக நடன நிகழ்வுகள் இடம் பெற்று அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

தொடர்ந்து ஆலையடிவேம்பு பிரதேச இந்து மாமன்ற வளாகத்தின் முன்றலில் அமைந்துள்ள அறுமுகநாலவரின் சிலைக்கு அதிதிகளால் மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

பின்னர் சுவாமி நித்தியானந்த சரஸ்வதி மகராஜ்க்கு பாதபூஜை இடம் பெற்றதுடன் அவரின் ஆசியுரையும் இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து புதிய கட்டடத் தொகுதி திரைநீக்கம் செய்யப்பட்டு உள்ளக நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இருபதாம் ஆண்டு நிறைவு நினைவு மலர் ஒன்றும் வெளிடப்பட்டது.


இவ்விழாவில், அப்பிரதேச இந்து மாமன்றத்தின் தலைவர் திரு.வே சந்திரசேகரம், செயலாளர் ஸ்ரீஸ்கந்தராஜா மணிவண்ணன், அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மா.தவயோகராஜா, பொதுச் செயலாளர் வே.கந்தசாமி, பிரதித் தலைவர் சி.தனபாலா, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வே.ஜெகதீசன், மாவட்ட இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜ், முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன், பனங்காடு பிரதேச வைத்தியசாலை வைத்தியர் சுபராஜ் குணாளினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது அதிதிகள், மூத்த உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னங்களும் வழங்கப்பட்டன.

அத்துடன் நடன நிகழ்வில் பங்கு பற்றிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டதுடன், அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் அறநெறி பாடசாலை ஆசிரியர்களுக்கான காலாசார உடைகளும் வழங்கப்பட்டன.

# சாய்ந்தமருதில் பேய் பங்களா போல் காட்சியளிக்கும் பள்ளிவாசல் கட்டடம்

## புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை





(அ.அஸ்வர்)

சாய்ந்தமருது மாளிகா வீதியில் பாழடைந்த பேய் பங்களா போன்று கைவிடப்பட்ட நிலையில் பள்ளிவாசல் கட்டடம் ஒன்று காட்சியளிக்கின்றது. இக்கட்டடத்தை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் புனரமைப்புச் செய்து தருமாறு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல வருடங்களுக்கு முன்னர் சாய்ந்தமருதைச் சேர்ந்த தனவந்தர் ஒருவரினால் சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அன்பளிப்பு செய்யப்பட்டிருந்த இக்கட்டடம், ஆரம்ப காலத்தில் சிறுவர்களுக்கான குர்ஆன் மத்ரஸாவாகவும் மார்க்கக் கல்வி நிலையமாகவும் சிறப்பான முறையில் இயங்கி வந்தது.

ஆனால், கடந்த பல வருடங்களாக இக்கட்டடம் எவ்வித செயற்பாடுகளுமின்றி கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

சாய்ந்தமருது ஜும்ஆ பள்ளிவாசலின் பொறுப்பிலுள்ள வக்பு செய்யப்பட்ட இக்கட்டடம், தற்போது திருடர்களதும் போதைப் பொருள் பாவனையாளர்களதும் மறைவிடமாக மாறியுள்ளது. அத்துடன், இப்பிரதேசத்தில் வசிப்போர் மற்றும் பயணிகளுக்கு அச்சமேற்படுத்தும் இடமாகவும் காணப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக பல தடவைகள் சம்பந்தப்பட்ட பள்ளிவாசல் நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போதிலும், இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாமல் கவனிப்பாரற்ற நிலையிலேயே கட்டடம் இருக்கின்றமையால் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் விவசாயிகளுக்கு பொதுக் கட்ட தேவை அதிகரித்து வரும் நிலையில், இக்கட்டடம் எவ்வித பிரயோசனமுமின்றி கைவிடப்பட்டிருப்பதையிட்டு பலரும் கவலை தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் அமைந்துள்ள இக்கட்டடத்தை மீள புனரமைப்புச் செய்து ஆக்கபூர்வமான இடமாக மாற்றம் செய்வதற்கும், இதன் அயலிலுள்ள குடும்பங்கள் மற்றும் பொது மக்கள் அச்சமின்றி வாழும் சூழலை ஏற்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் துரிதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# காய்ச்சலால் குடும்பஸ்தர் உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியான காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

கோண்டாவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நாராயணசாமி கோவர்த்தனன் என்கிற 3 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 5 நாள்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த அவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ‘பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை முற்றாகத் தவிர்ப்போம்’



## உருத்திரபுரம் கூழாவடியில் சிரமதானம்

(மன்னார் நிருபர்)

உருத்திரபுரம் கூழாவடியில் ‘வன்னி மண் அறக்கட்டளை’யால் நேற்று (13) சிரமதானம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கனடாவிலிருந்து வந்துள்ள சமூக செயற்பாட்டாளர் அபர்ணா செல்வராசாவின் எண்ணக்கருவில் உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் இந்த சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

“பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பாவனையை முற்றாக தவிர்ப்போம்” எனற தொனிப் பொருளில் உருத்திரபுரம் கூழாவடி, உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழக மைதானம், உருத்திர புரீஸ்வரர் சிவன் ஆலயம் மற்றும் அருகிலுள்ள குளக்கட்டுப் பகுதிகளில் காணப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்து அவற்றை பிரதேச சபையினரிடம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இச் சிரமதானத்தில் கனடாவிலிருந்து வருந்துள்ள சமூக செயற்பாட்டாளர் அபர்ணா செல்வராசா, அவரது தந்தை, உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள், வன்னி மண் அறக்கட்டளை உறுப்பினர்கள் மற்றும் கூழாவடி கடை உரிமையாளர்கள் எனப் பலரும கலந்து கொண்டனர்.

அதேவேளை ஒவ்வொரு மாதமும் சிரமதானம் செய்வதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.













# இன்றைய ராசி பலன்கள் - 14.08.2023

## மேஷம்

இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாளாக இருக்கும். எளிதில் அனைத்து செயல்களையும் செய்வீர்கள். அதிக ஆற்றலுடன் காணப்படுவீர்கள். இன்று வெற்றி நிச்சயம்.

பணியில் உங்கள் சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும். மனதை நிலைநிறுத்தி அனுசரித்து பணியாற்ற முயலுங்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து மகிழ்வீர்கள். இது நல்ல பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். வங்கியிலும் கணிசமான தொகையை பராமரிப்பீர்கள்.

இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் தைரியம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## ரிஷபம்

இன்று பதட்டம் காணப்படும். இசையை கேட்பதன் மூலம் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை காண்பதன் மூலம் மனதிற்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளை நன்றாக திட்டமிட்டு கவனமுடன் மேற்கொள்ள வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே திறமையாக கையாளவும்.

உங்கள் துணையிடம் அமைதியாக பேச வேண்டும். பிரச்சினைகளை அமைதியாக தீர்க்க வேண்டும்.

இன்று பணப் புழக்கம் அவ்வளவு சிறப்பாக இருக்காது. செலவுகளும் அதிகமாக காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று ஓய்விற்கு நேரம் கிடைக்காது. கால்களில் வலி காணப்படும்.

## மிதுனம்

இன்று சிறப்பான நாளாக இருக்காது. முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். எதையும் எளிதாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

பணியில் சவால்கள் நிறைந்திருக்கும், அதிகரிக்கும் பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை சிறந்த முறையில் திட்டமிட வேண்டும்.

நீங்கள் சிறிய விடயத்தையும் பெரிதாக்குவீர்கள். உங்கள் துணையிடம் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும்.

அஜாக்கிரதை காரணமாக பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாக கையாள வேண்டும்.

செரிமானம் சம்பந்தமான கோளாறுகள் காணப்படும். எனவே ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

## கடகம்

பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இன்றைய சூழ்நிலையை சமாளிப்பதை பற்றி சிந்திப்பீர்கள். வீட்டு பிரச்சினைகளை சமாளிப்பது பற்றிய கவலை இருக்கும். பாதுகாப்பின்மை உணர்வை தவிர்த்து விடுங்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

சிறந்த முறையில் பணியாற்ற அருமையான வாய்ப்புகள் கிடைக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு சன்மானமாக பதவி உயர்வு கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையிடம் மனம் திறந்து பேச வேண்டும். இந்த அணுகுமுறை அவரை மகிழ்விக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. மருத்துவ செலவுகள் அதிகமாகக் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. செரிமானம் சம்பத்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக்கப்படுவீர்கள்.

## சிம்மம்

இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். மகிழ்ச்சியான தருணங்கள் உங்களை உற்சாகமாக வைத்திருக்கும். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் உங்களின் பலவீனங்களை புறந்தள்ளி பலத்துடன் பணியாற்றுவீர்கள். பணியில் உங்கள் நேர்மை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையிடம் காதலை வெளிப்படுத்தும் விதமாகப் பழகுவீர்கள். உங்கள் துணையுடன் நல்லுறவைப் பராமரிப்பீர்கள்.

உங்களிடம் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். சேமிப்பிற்கான அடித்தளத்தை இன்று அமைப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்கள் மனதில் உற்சாகம் காணப்படும்.

## கன்னி

கடின உழைப்பின் மூலம் இன்றைய நாளை சிறப்பாக்கிக் கொள்ளலாம். இன்றைய நாளை சிறந்த முறையில் உபயோகிப்பதன் மூலம் உங்களின் திறமையை நிரூபிக்கலாம்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கான நேரம் குறைந்து காணப்படும். இதனால் உங்களுக்கு கவலை உண்டாகும். எனவே குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க திட்டமிட்டு செயலாற்றுங்கள்.

உங்கள் குடும்ப முன்னேற்றம் பற்றி உங்கள் துணையிடம் விவாதிப்பீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் கடின உழைப்பிற்கான ஊக்கத்தொகை அல்லது சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

இன்று முழுவதும் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.

## துலாம்

உங்களுடைய அறிவைப் பயன்படுத்தி இன்றைய நாளை திட்டமிடுங்கள். சில சமயங்களில் நீங்கள் பொறுமையை இழக்க நேரும். எனவே அமைதியாக இருப்பது நல்லது.

பணிகளைக் கையாள்வதில் பொறுமை தேவை. இன்று பணிகள் அதிகமாக காணப்படும். எனவே பணிகளை உங்களால் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிபூர்வமாக நடந்து கொள்வீர்கள், உறவில் திருப்தி நிலவ இதனைத் தவிர்த்தல் வேண்டும்.

இன்று பணத்தை அதிகமாக செலவு செய்வீர்கள். எனவே கடன்களை எதிர்கொள்ள நேரலாம்.

உங்கள் தாய்க்கு ஒவ்வாமை காரணமாக பாதிப்பு ஏற்படும். அதற்காக பணம் செலவு செய்ய நேரும்.

## விருச்சிகம்

உங்கள் முயற்சிகளில் வெற்றி பெறுவதற்கு நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும். இன்றைய நாள் கடினமாக இருக்கும். நீங்கள் நம்பிக்கையோடு செயல்பட்டால் விரும்பியதை அடையலாம்.

பணியைப் பொறுத்தவரை இன்று சிறப்பான நாளாக இருக்காது. பணிகள் நிலுவையில் இருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். பணியில் மந்த நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் பாதுகாப்பின்மையை உணர்வீர்கள். இம்மாதிரி உணர்வுகள் உறவுக்கு உகந்ததல்ல.

குடும்ப பெரியவர்களின் ஆரோக்கியத்திற்கு செலவு செய்யும் வகையில் இன்று அதிக செலவினங்கள் காணப்படும். சேமிப்பு குறைந்து காணப்படும்.

தேவையற்ற உணர்வுகள் உங்கள் ஆற்றலைக் குறைக்கும். இதனால் தலைவலி ஏற்படும்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.08.2023




முறையான திட்டமிட்ட அணுகுமுறை மூலம் இன்றைய நாளை அற்புதமான நாளாக ஆக்கலாம். உங்கள் தொடர்பாடல் திறனை மேம்படுத்தினால் பல சிறப்புகளைப் பெறலாம். உங்கள் புத்திசாலித்தனத்தை நன்கு பயன்படுத்த வேண்டும்.

பணிச்சுமை அதிகமாக இருந்தபோதிலும் குறித்த நேரத்திற்குள் பணியை முடிப்பீர்கள். உங்கள் பணிகளை தன்னம்பிக்கையுடன் கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வுடன் அணுகுவீர்கள். இதனால் உங்கள் இருவருக்கும் இடையிலான அன்பு அதிகரிக்கும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சிறிய அளவில் கடன் வாங்கி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




செயல்களை நிறைவேற்றுவதில் தெளிவான மனநிலையை சார்ந்திருப்பீர்கள். இது உங்கள் பேச்சில் வெளிப்படும்.

பணிகளைப் பொறுத்தவரை நிறைய சவால்களை எதிர்கொள்ள நேரும். இன்று பணிகள் அதிகமாக காணப்படும். திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சில அசௌகரியமான உணர்வுகளை கொள்வீர்கள். நட்பான மற்றும் சகஜமான அணுகுமுறை தேவை.

இன்று பணப்புழக்கம் மகிழ்சிகரமாக இருக்காது. பணத்தை தக்க வைக்கும் திறமைகள் இருந்த போதிலும் அதிக செலவுகள் இருப்பதன் காரணமாக பணத்தை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

தாயின் உடல் நிலை பாதிக்கப்படும். அது சரி செய்யக் கூடிய அளவிலான சிறிய பிரச்சினையாகத் தான் இருக்கும்.




இன்று பயனுள்ள நாளாக இருக்கும். நீங்கள் நேர்மறையான போக்கில் செயல்பட்டால் இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று திட்டமிட்டு செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணிகளை திறமையாக முடிப்பதில் சில ஏமாற்றங்களும் தடைகளும் காணப்படும். முன்னுரிமைப்படி பணிகளை மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் இனிமையான தொடர்பாடல் மூலம் உங்கள் துணையை மகிழ்விப்பீர்கள்

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதை சிறந்த விஷயங்களுக்காக பயன்படுத்துவீர்கள்.

உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




உங்கள் அணுகுமுறையில் பொறுமையும் உறுதியும் அவசியம். உங்கள் செயல்களை முன்கூட்டியே திட்டமிடவேண்டியது அவசியம். இன்று சில சௌகரியங்களை இழக்கலாம்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளைக் காட்டுவீர்கள். அதன் மூலம் நற்பெயரைப் பெறுவீர்கள்.

கவலைகளின் காரணமாக பதற்றம் உண்டாகும். உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவின் நல்லிணக்கத்தை அது பாதிக்காதவாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

வீடு சீரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். இதனால் பொறுப்புகள் அதிகரிக்கும். செலவினை கட்டுப்படுத்துங்கள்


உங்கள் தாயின் சிறிய உடல் நிலை பிரச்சினை ஒன்றிற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரும்.







# ஊழலை ஒழிக்க இணைந்து செயல்பட வேண்டும்: ஜி 20 நாடுகளிடம் பிரதமர் மோடி வேண்டுகோள்



ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து ஜி20 அமைச்சர்கள் கூட்டம் மேற்கு வங்க மாநிலம் கல்கத்தாவில் நடைபெற்றது. இதில் பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது ஊழலை ஒழிக்க இணைந்து செயல்பட வேண்டும் என பிரதமர் மோடி ஜி 20 நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊழலால் தீவிரமாக பாதிக்கப்படுவது நாட்டின் ஏழைகளும் விளிம்புநிலை மக்களும்தான். நாட்டின் வளத்தை ஊழல் பாதிக்கிறது. சந்தையை சிதைக்கிறது. அரசின் சேவைகளை பாதிக்கிறது. அனைத்துக்கு மேலாக, ஊழலால் மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகிறது. நாட்டின் வளத்தை மக்களின் நலனுக்கான பயன்படுத்துவதே ஒரு அரசின் கடமை என்கிறது அர்த்தசாஸ் திரம். அந்த இலக்கை அடைய, ஊழலை ஒழிப்பது அவசியம்.

ஊழலுக்கு எதிராக இந்தியாமிகக் கடுமையான கொள்கைகளைக் கொண்டிருக்கிறது. ஊழலை ஒழிக்க தொழில்நுட்பத்தின் உதவியுடன் அனைத் துத் துறைகளிலும் வெளிப்படைத் தன்மையை கொண்டு வரும் முயற்சியை மத்தியஅரசு மேற்கொண்டு வருகிறது.

மக்களுக்கான நலத்திட்டங்கள் மற்றும் அரசின் திட்டங்களில் இருக்கும் ஓட்டைகள் அடைக்கப்பட்டு வருகின்றன. லட்சக்கணக்கான மக்களுக்கு மத்திய அரசின் நலஉதவிகள் நேரடியாக சென்ற டைகின்றன.

வெளிநாடுகளுக்குத் தப்பி யோடும் பொருளாதாரக் குற்றவாளிகளை மீட்டு வருவது அனைத்து ஜி20 நாடுகளுக்கும் சவால் நிறைந்ததாக உள்ளது. 2014 ஆம் ஆண்டில் என்னுடைய முதல் ஜி 20 கூட்டத்திலும் இந்த விவகாரம் குறித்துப் பேசினேன். 2018 ஆம் ஆண்டு கூட்டத்தில், இந்த விவகாரம் தொடர்பாக 9 திட்டங்களை முன்வைத்தேன்.

ஊழலை முற்றிலும் ஒழிக்க நாடுகளிடையிலான ஒத்துழைப்பு அவசியம். சட்ட நடவடிக்கை, தகவல் பறிமாற்றம், சொத்தை முடக்குதல் உள்ளிட்ட தளங்களில் நாடுகளிடையே புரிந்துணர்வு வேண்டும்.

இதற்கு ஜி20 நாடுகள் முன்னு தாரணமாக திகழ வேண்டும். நமது கூட்டு முயற்சி மூலம், ஊழலை வேரோடு ஒழிக்க முடியும் என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

## சென்னை சில்க்ஸ் ஆடை விற்பனை நிலையத்தில் தீ!

கும்பகோணம் திருநாராயணபுரம் வீதியில் இயங்கி வரும் சென்னை சில்க்ஸ் ஆடை விற்பனை நிலையத் தில் தீ பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த ஆடை விற்பனை நிலை யத்தில் 500 இற்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின் றனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஆடி சிறப்பு தள்ளுபடி அறிவித்திருந்த தால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆடைகளை வாங்குவதற்காக அங்கு குவிந்திருந்தனர்.

இந்த நிலையில் மாலை 7 மணி அளவில் அந்த நிறுவனத்தின் முகப்பு பகுதியிலிருந்து புகை எழும்பியது. இதனையறிந்த வீதியில் நின்றவர்கள், நிறுவன ஊழிய ரிடம் தெரிவித்ததையொட்டி, கடை ஊழியர்கள் மற்றும் உள்ளே இருந்த பொதுமக்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியேறி வீதிகளில் கூடினர்.

மேலும், எதிர்புறம் உள்ள அரசு போக்குவரத்து கழகம், தனியார் மருத்துவமனையிலிருந்த நோயா ளிகள், வணிக வளாகங்கள் மற்றும் குடியிருப்புகளில் இருந்தவர்களும் வெளியேறியுள்ளனர்.

## சுதந்திர தின நிகழ்ச்சியை முன்னிட்டு போக்குவரத்து நடைமுறையில் மாற்றம்!




சுதந்திர தின விழா நிகழ்ச்சியை முன்னிட்டு சென்னையில் ஒகஸ்ட் 15 ஆம் திகதி போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பாக போக்குவரத்து பொலிஸார் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், சுதந்திர தினவிழா நிகழ்ச்சி நாளை 15 ஆம் திகதி சென்னை கோட்டையில் நடைபெற உள்ளதால், அன்று காலை 06.00 மணி முதல் நிகழ்ச்சி முடியும் நேரம் வரை போக்குவரத்து நடைமுறை மாற்றியமைக்கப்பட உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

## சித்தராமையா உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கின்றார்: ராமதாஸ் கண்டனம்



கர்நாடக அணைகளில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க முடியாது என்று சித்தராமையா கூறுவது உச்ச நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் என பா.ம.க. தலைவர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடகத்தில் போதிய அளவு மழை பெய்யவில்லை என்பதால், தமிழ்நாட்டில் குளிர்கால பயிர் செய்கைக்கு காவிரியில் தண்ணீர் திறந்து விட முடியாது என்று கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா கூறியிருக்கிறார்.

கர்நாடக அணைகளில் தண்ணீரை வைத்துக் கொண்டு தமிழகத்துக்கு தண்ணீர் வழங்க முடியாது என்று சித்தராமையா கூறுவது உச்ச நீதிமன் றத்தை அவமதிக்கும் செயல். இது கண்டிக்கத்தக்கது என்று குறிப்பிட் டுள்ளார்.

# மெக்சிகோவில் 300 சடலங்களை அமிலத்தில் கரைத்த சமையல்காரர்!




மெக்சிகோவில் சினாலோவா போதை மருந்து கடத்தல் குழுவினரை சேர்ந்த சமையல்காரர் என அறியப்படும் ஒருவர் 300 சடலங்களை அமிலத்தில் கரைத்தார் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த சினாலோவா குழுவானது உலகின் மிகவும் சக்திவாய்ந்த மற்றும் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல் அமைப்பு என அறியப்படுகிறது. கடந்த 1980 களில் இருந்தே மெக்சிகோ நாட்டின் பெரும்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிலும் வைத்துக்கொண்டுள்ளது.

இந்த நிலையிலேயே பொலிஸார் முன்னெடுத்த அதிரடி நடவடிக்கை ஒன்றின் மூலமாக சமையல்காரர் என அறியப்படும் சாண்ரியாகோ மேசலோபெஸ் என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் மொத்த அதிகாரிகளையும் ஸ்தம்பிக்க வைத்துள்ளது.

சினாலோவா குழு கடத்தி கொலை செய்யும் பெரும்பாலான சடலங்களை இவர் அமிலத்தில் கரைத்து அடையாளம் தெரியாமல் செய்துள்ளார் என தெரிவித்துள்ளார்.

1996 ஆம் ஆண்டு பண்ணை ஒன்றில் பணியாற்றியபோது சடலங்களை அமிலத்தில் கரைக்கும் செயலை முன்னெடுத்தேன் அவர் குறிப்பிட்டுள்ளார். இவர் பெரிய பீப்பாய்க்குள் தண்ணீர் மற்றும் அமிலத்தை கலந்து உடல் பாகங்களை நிரப்பி கரைத்துள்ளனர். மட்டுமின்றி, சினாலோவா குழுவினரில் சிலருக்கு தாம் பயிற் சியும் அளித்துள்ளேன் எனவும் தெரிவித்துள்ளார்.

இவர் கைதான பின்னர் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பல பொலிஸாரை அணுகி, தங்களின் உறவினர்களை அடையாளம் காண வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட தீவிர சோதனையில், பண்ணை ஒன்றில் இருந்து 200 கிலோ அளவுக்கு மனித உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில், சாண்ரியாகோ மேசலோபெஸ் தெரிவிக்கையில், 300 சடலங்கள் வரையில் தாம் அமிலத்தில் கரைத்திருக்கலாம் என விசாரணையின் போது குறிப்பிட்டுள்ளார்.

# பிரித்தானியாவில் இரு நாட்களுக்கு முடங்கும் தொடருந்து சேவைகள்!



பிரித்தானியாவில் சம்பள உயர்வு கோரி 20 ஆயிரம் தொடருந்து சேவை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

கொரோனா தொற்று மற்றும் உக்ரைன் ரஷ்யப் போர் போன்ற காரணங்களால் ஐரோப்பிய நாடுகள் பெரும் பொருளாதார சரிவை சந்தித்தன.

மேலும், ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து விலகியதால் பிரித்தானியாவில் அதன் பாதிப்பு அதிகமானது.

இதனால் பிரித்தானியாவில் தொடருந்து சேவை, விமான நிலையம், தபால் மற்றும் சுகாதார துறை ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி அவ்வப்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது அரசாங்கத்துக்கு பெரும் அழுத்தமாக உள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் 26 ஆம் திகதி மற்றும் அடுத்த மாதம் 2 ஆம் திகதிகளில் பிரித்தானியாவில் உள்ள சுமார் 20 ஆயிரம் புகையிரத சேவை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட திட்டமிட்டு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடரும் கொரோனா ஆபத்து!

கொரோனாவின் நீண்டகால நோய் பாதிப்பை சந்திப்போருக்கு மூட்டு சம்பந்தமான பிரச்சனை ஏற்படுவது உறுதியாகியுள்ளது.

இவ்வகை வைரஸினால் பாதிக்கப்பட்ட நபர்கள் 10 நிமிடம் நின்றுகொண்டு இருந்தால், அவர்களின் மூட்டுப்பகுதியில் நீல நிறமாக மாறுகிறது என அதிர்ச்சி தகவல் கிடைத்துள்ளன.

உலகளவில் இந்த பிரச்சனை உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

ஐரோப்பிய நாட்டை சேர்ந்த 33 வயது நபர் கொரோனா காரணமாக பாதிக்கப்பட்டு குணமடைந்து இருக்கிறார்.

இவருக்கு தற்போது 10 நிமிடம் நின்றாலே மூட்டு பகுதியில் கடுமையான வலி, மூட்டின் நிறம் மாறுதல் போன்ற உணர்வுகள் ஏற்பட்டு இருக்கின்றன.

இதற்கு மருத்துவமனைக்கு சென்ற போது, அங்கு நீண்டகால கொரோனா அறிகுறி உறுதி செய்யப்பட்டுள்ளது.